**செய்தி வெளியீடு எண்: 583** **நாள் :18.11.2014**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று **(18.11.2014)** மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு K.A.ஜெயபால் அவர்கள் மீன்வளத்துறையின் பொறியியல் பிரிவு மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்தார்.

மீன்வளத்துறையின் மாநாட்டு கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, அரசுச் செயலர், முனைவர் ச.விஜயகுமார், இ.ஆ.ப, மீன்துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப, மீன்வளத்துறையின் பொறியியல் பிரிவு தலைமை பொறியாளர் திரு. இரா. தங்கபிரகாசம் மற்றும் தலைமை அலுவலக மீன்துறை கூடுதல் இயக்குநர் (கடல்வளம்) திரு. க. ரெங்கராஜு ஆகியோர் கலந்து கொண்டனர்.

மீன்வளத்துறையின் பொறியியல் பிரிவின் மூலம் மத்திய, மாநில அரசுகள், நபார்டு, தேசிய மீள்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் ரூ **508.18** கோடி மதிப்பிலான பல்வேறு மீன்பிடித் துறைமுகங்கள் கட்டுமானம் மற்றும் தரம் உயர்த்துதல், மீன் இறங்கு தளங்கள் கட்டுதல், முகத்துவாரங்களை நிலைப்படுத்துதல், மீன் பண்ணைகள் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றுள் குறிப்பாக கட்டுமான பணியின் பல்வேறு நிலைகளிலுமுள்ள முக்கிய திட்டங்களான ரூ.**97.40** கோடி மதிப்பீட்டில் தேங்காய்ப்பட்டினம் மீன்பிடி துறைமுகம், ரூ.**87.75** கோடி மதிப்பீட்டில் குளச்சல் மீன்பிடி துறைமுகம் மற்றும் ரூ.**148** கோடி மதிப்பீட்டில் பூம்புகார் மீன்பிடி துறைமுகம் ஆகியவற்றின் கட்டுமான பணிகள், ரூ.**73.52** கோடி மதிப்பீட்டில் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுக விரிவாக்க பணிகள், ரூ.**87** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் சென்னை

மீன்பிடித் துறைமுக மேம்பாட்டு பணிகள், ரூ.31.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்ததப்படும் நாகப்பட்டினம் மாவட்டம், வெட்டார் மற்றும் கடலூர் மாவட்டம், வெள்ளார் முகத்துவாரம் நிலைப்படுத்தும் பணிகள், முறையே ரூ.10.35 கோடி மற்றும் ரூ.12.05 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் கடலூர் மீன்பிடித் துறைமுகம் புதுப்பித்தல் மற்றும் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக நவீனப்படுத்துதல் பணிகள், ரூ.49.97 கோடி மதிப்பீட்டில் சுனாமி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டு வரும் 13 மீன் இறங்குதள கட்டுமான பணிகள், கூடங்குளம் சுற்றுப்புற பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் ரூ.92 கோடி மதிப்பீட்டிலான பணிகள் போன்றவற்றின் பணி முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பணிகளை விரைந்து முடித்து அவற்றை மீனவர்களின் பயன்பாட்டிற்கு அளித்திட தக்க அறிவுரைகளை வழங்கியதுடன் பணிகளை சிறப்பாக செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, முழு வீச்சில் பணிகள் நடைபெற்று வரும் சென்னை, சேத்துப்பட்டு ஏரியினை புனரமைத்து ரூ.42 கோடி செலவில் பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்கா அமைக்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மீன்பிடித் துறைமுக திட்டங்கள் கோட்ட செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மீன்துறை ஆணையர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**